



கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, மாணவ, மாணவிகளுக்கு பட்டமளிப்பு சான்றிதழ் வழங்கினார். உடன் உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன், மாவட்ட ஆட்சியர் எம்.எஸ்.பிரசாத், சட்டமன்ற உறுப்பினர்கள் வசந்தம் கார்த்தகேயன், உதயசூரியன், நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், கல்லூரி முதல்வர் மற்றும் பேராசிரியர்கள் உள்ளனர்.

## கோவையில் புதிய கட்டட கட்டுமானப் பணி!

கோவை, நவ.10– கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் 23 க்குட்பட்ட மதுசூதனன் நகர் பகுதியில் மாநகராட்சி பொது நிதியின் கீழ் ரூ.22.60 இலட்சம் மதிப்பீட்டில் சுகாதார ஆய்வாளர் அறை மற்றும் வார்டு அலுவலக கட்டிடம் கட்டும் பணியினை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப. ராஜ்குமார் துவக்கி வைத்தார். இதில் மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், தலைமை பொறியாளர் விஜயகுமார், கிழக்கு மண்டலகுழு தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், உதவி செயற் பொறியாளர்கள் எழில், சத்தியமூர்த்தி கருப்பசாமி உள்பட கழக நிர்வாகிகள், மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருகிறது!




### கடலூர் – மஞ்சக்குப்பத்தில் நாளை – தி.மு.க. கூட்டணிக் கட்சிகள் சார்பில்

# பெருந்திரள் ஆர்ப்பாட்டத்தில் திரளாக கலந்துகொள்ள வேண்டும்!

### அனைத்துக்கட்சிக்கூட்டத்தில்தீர்மானம்! அமைச்சர்எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்சிறப்புரையாற்றினார்!




கடலூர், நவ.10- கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், சிதம்பரம் பைசல் மஹாலில், 09.11.2025, ஞாயிற்றுக் கிழமை, காலை 11 மணியளவில் நடைப்பெற்றது.

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர், மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றி னார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், எஸ்.ஐ.ஆர் என்ற பெயரில் ஜனநாயக சட்ட விரோத நடவடிக்கைகளை தேர்தல் ஆணையம் செய்து வருவதை நிறுத்திட வேண்டும். எல்லா வீட்டில் அனைத்துக் கட்சிகள் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும் என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி வழக்கும் போடப்பட்டுள்ளது, அந்தக் கூட்டத்திற்கும் வராமல் பா.ஜ.க.வுக்கு ஆதரவாக தமிழ்நாட்டுக்கு கேடு விளைவிக்கும் விதமாக சில கட்சிகள் துரோக செயலை ஜனநாயகத்தை புறக்கணித்ததை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது.

பா.ஜ.க.வின் அரசியல் சதி திட்டத்திற்கு துணை போகும் விதமாக தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை செயல்படுத்தி வருவதை கண்டித்து, மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி இயக்கங்கள், திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையில், நவம்பர் 11, செவ்வாய்க்கிழமை, காலை 10 மணி அளவில், மாவட்ட தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நமது கடலூர் கிழக்கு மாவட்டத்தில், கடலூர் மாநகரம், மஞ்சக்குப்பம் தலைமை தபால் நிலையம் எதிரில், ஆர்ப்பாட்டம் நடத்திட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆர்ப்பாட்டத்தில் அனைத்து கட்சிகளின் சார்பில் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பாக பாராட்டத்தை நடத்திடுவது என முடிவெடுக்கப் பட்டது.

இந்நிகழ்வில் கடலூர் எம்.பி., எம்.கே.விஷ்ணு பிரசாத், கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., எம்.ஆர்.ராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ., கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, முன்னாள் எம்.எல்.ஏ., துரை.கி.சரவணன், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர்கள் திலகர், செந்தில்நாதன், மதிமுக மாவட்ட செயலாளர் ஏ.என்.குணசேகரன், எம்.பிச்சை,

திக பொதுச் செயலாளர் துரை.சந்திரசேகர், மாவட்ட தலைவர்கள் பூ.சி.இளங்கோவன், சொ.தண்ட பாணி,

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ஜி.மாதவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் டி.மணிவாசகம், மாவட்ட செயலாளர் துரை,

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாவட்ட செயலாளர்கள் முகமது இஸ்மாயில், சுக்கூர், விசிக துணை மேயர் பர்தாமரை செல்வன், மாவட்ட செயலாளர்கள் அரங்க.தமிழ் ஒளி, மு.செந்தில், கே.மணிவண்ணன், அறிவுடை நம்பி, நீதிவள்ளல்,

மக்கள் நீதி மய்யம் மாவட்ட செயலாளர் டி.கே.மூர்த்தி, கே.தங்கவிக்ரம், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர்கள் ப.ரஹீம், ஜே.முகமது அஸ்லாம், தமிழக வாழ்வுரிமை கட்சி சு.சேரலாதன்,

மூவேந்தர் முன்னேற்ற கழக மாநில அமைப்பு செயலாளர் ஜி.எம்.ஆர். வைபவ் வண்டையார், மாவட்ட செயலாளர் விப்ரநாராய ணன்,

தமிழ்நாடு விவசாயிகள் தொழிலாளர் கட்சி பொன்.குமார், சமத்துவ மக்கள் கழகம் மாவட்ட தலைவர் எஸ்.கோபி, மாவட்ட செயலாளர்ஜி.ராஜவேல், மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் ஓ.ஆர்.ஜாகீர் உசேன், ஏ.எச்.எம்.ஹமீது ஜெகபர்,

மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, ஒன்றிய கழக செயலாளர் தங்க.ஆனந்தன், வி.ஜி.பி.சபாநாயகம், சங்கர், வி.ஆர்.ராஜேந்திரகுமார், ஆர்.கலையரசன், டாக்டர் ப.மனோகர், ஆர்.நாராயணசாமி, வி.பி.பாலு, பொதுக்குழு உறுப்பினர் ஜேம்ஸ் விஜயராகவன், கே.பி.ஆர்.பாலமுருகன்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு.சந்திரசேகரன்,

தகவல் தொழில்நுட்ப அணி ஏ.ஜாபர் அலி,

சிதம்பரம் நகர துணை செயலாளர் பாலு, இளங்கோ, வெங்கடேசன், ஸ்ரீதர் உள்ளிட்ட மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாவட்ட நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

# நெல்லை மாவட்டத்தில் எஸ்.ஐ.ஆர்.ரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர்கள் இரா. ஆவுடையப்பன் - மு. அப்துல் வகாப் - ம. கிரகாம்பெல் அறிக்கை!







நெல்லை, நவ.10- முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் ஆணைப்படி தலைமை கழக வழிகாட்டுதலின்படி திருநெல்வேலி மாவட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 11.11.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில் நடைபெற உள்ளது. என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் ஆகியோர் கூட்டறிக்கையில் அறிவித்துள்ளனர்.

அந்த கூட்டறிக்கை வருமாறு.

முதலமைச்சர் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களின் ஆணைப்படி தலைமை கழக வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் சிறப்பு தீவீர வாக்காளர் பட்டியல் சீராய்வு (SIR) கொண்டு வந்துள்ள இந்திய தேர்தல் ஆணையத்தை கண்டித்து ஒருங்கிணைத்த மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருநெல்வேலி சந்திப்பு இரயில் நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் 11.11.2025 (செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் நடைபெற உள்ளது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், ஆலங்குளம், நாங்குநேரி, இராதாபுரம் ஆகிய சட்டப்பேரவை தொகுதிகளுக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகிகள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, பகுதி ஒன்றிய, நகர, பேரூர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் (BLA2,) (BDA,)(BLC,) கழக தோழர்கள் மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மாவட்ட, மாநகர, பகுதி ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தவறாது பங்கேற்று மாபெரும் கண்டன முழக்கமிட கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### ஆதிதிராவிடர் – பழங்குடியின நலத்துறை சார்பில்

# இதழியல் - ஊடகவியல் துறையில் ஒரு வார உண்டு உறைவிடப் பயிற்சி பட்டறை!

## சென்னையில் நவ. 10 முதல் 18 வரை நடைபெறுகிறது!

சென்னை, நவ. 9 - ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நலத்துறையின் சார்பில் சென்னை இதழியல் கல்வி நிறுவனம் சமூகநீதி மற்றும் சமத்துவ மையம், சென்னை சமூகப் பணி கல்லூரி ஆகியோருடன் இணைந்து இதழியல் மற்றும் ஊடகவியல் துறையில் “ஒரு வார உண்டு உறைவிடப் பயிற்சி பட்டறை” கோட்டூர்புரத்தில் உள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் நவம்பர் 10 முதல் 18 வரையில் 9 நாட்கள் நடைபெறுகிறது!

பயிற்சியை நிறைவு செய்யும் 26 பங்கேற்பாளர்களில் 15 பங்கேற்பாளர்களுக்கு முன்னணி ஊடக நிறுவனங்களில் இரண்டு மாதங்கள் ரூ.20,000/- ஊக்கத் தொகையுடன் கூடிய பயிற்சி வழங்கப்பட உள்ளது!

தமிழ்நாடு அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, பட்டியலின மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர்களின் கல்வி, வேலை வாய்ப்பு, தொழில்முறை திறன் மற்றும் சமூகத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிமுகம் செய்து செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக, தற்போது தமிழ்நாடு அரசின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, சென்னை இதழியல் கல்வி நிறுவனம், மற்றும் சமூகநீதி மற்றும் சமத்துவ மையம், சென்னை சமூகப்பணி கல்லூரி ஆகியோருடன் இணைந்து“இதழியல் மற்றும் ஊடகவியல் துறையில் ”ஒரு வார உண்டு உறைவிடப் பயிற்சி பட்டறையை கோட்டூர்புரத்தில் உள்ள சென்னை இதழியல் கல்வி நிறுவனத்தில் நவம்பர் 10 முதல் 18 வரையில் 9 நாட்கள் நடத்துகிறது.

இப்பயிற்சியில் தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 26 இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களை பெற்ற பட்டியலின மற்றும் பட்டியல் பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த பட்டதாரிகள் பங்கேற்று பயிற்சி பெற இருக்கிறார்கள்.

இந்த சிறப்பு திட்டமானது, சமூகத்தில் விளிம்பு நிலையில் உள்ளவர்களுக்கு குரல் கொடுக்க ஊடகத்தை ஒரு சமூக மாற்ற கருவியாகப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், பட்டியலின மற்றும் பட்டியல் பழங்குடியினர் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள் ஊடக உலகில் திறமையுடன் நுழைய தேவையான எழுத்து, காட்சி, ஒலி மற்றும் டிஜிட்டல் ஊடகத் திறன்கள் பயிற்சியாக வழங்கப்பட உள்ளன.

**முக்கிய அம்சங்கள்:**

பங்கேற்பாளர்களுக்கு சென்னை இதழியல் கல்வி நிறுவனமானது நேரடி சிறப்பு பயிற்சி வகுப்புகளை தமிழ்நாட்டில் அனுபவமுள்ள மூத்த பத்திரிகையாளர்கள், நிருபர்கள், எழுத்தாளர்கள், இதழியலாளர்கள், தரவு இதழியல் நிபுணர்கள் ஆகியோரைக் கொண்டு நடத்துகிறது.

அச்சு ஊடகம், தொலைக்காட்சி, வானொலி, இணைய ஊடகங்களில் செய்தி உருவாக்கும் நடைமுறை பயிற்சிகள் மற்றும் செய்முறை வகுப்புகள் பங்கேற்பா ளர்களுக்கு வழங்கப்படுகிறது.

குறிப்பாக வீடியோ எடிட்டிங், பாட்காஸ்டிங், செய்தி தொகுப்பு, தரவு இதழியல் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியவை பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

பயிற்சியை நிறைவு செய்யும் 26 பங்கேற்பாளர்களில் இருந்து 15 பங்கேற்பாளர் களுக்கு முன்னணி ஊடக நிறுவனங்களில் இரண்டு மாதங்கள் ரூ.20,000/- ஊக்கத்தொகையுடன் கூடிய பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இந்த பயிற்சியானது பட்டியலின மற்றும் பட்டியல் பழங்குடியினர் சமூகத்தினரின் குரலை பதிவு செய்யும் பிரதிநிதிகளாக இளைஞர்கள் ஊடகத் துறையில் பணிபுரியும் வாய்ப்பையும், சமூக நீதி, சமத்துவம், மனித உரிமைகள் மற்றும் பாகுபாடின்றி வாழும் சம உரிமை போன்ற கோட்பாடுகளைச் சமூகத்தில் வளர்த்தெடுக்கக் கூடிய சமூக பொறுப்புடன் கூடிய இதழியலாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை உருவாக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப் படுகிறது.




நெல்லை மாவட்டம் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் இரண்டாம் கட்டமாக 4,ம் முகாம் நெல்லை மாநகராட்சிக்கு உட்பட்ட மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முகாமினை மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன், துணை மேயர் கே.ஆர்.ராஜு ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# தாம்பரம் வழக்கறிஞர் எஸ்.கே.நெப்போலியன் மறைவு!

பல்லாவரம், நவ9- வழக்கறிஞர் எஸ்.கே. நெப்போலியன் தாம்பரம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக இருந்து கழகத் தோழர்களுக்காக கழகத்தின் பிரச்சினைகளுக்கான வழக்குகளில் வாதாடி வெற்றி கண்டு கழகத் தோழர்களை காத்தவர். பம்மல் வடக்கு பகுதி மாவட்டக் கழகப் பிரதிநிதியாக அனகாபுத்தூர் மட்டுமின்றி காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதும் அனைத்து கழகத் தோழர்களிடமும் நிர்வாகிகளிடமும் அன்பும் பாசத்துடனும் பழகக்கூடியவர்.

தற்போது தாம்பரம் நீதிமன்றத்தின் அரசு வழக்கறிஞராகவும் பணியாற்றி வந்த வழக்கறிஞர் எஸ்.கே.நெப்போலியன் அவர்கள் 8.11.2025 அன்று மாலை 3 மணி அளவில் உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அனகாபுத்தூர் கன்னியம்மன் கோயில் தெருவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அவரது உடலுக்கு கழகத்தினர் இறுதி அஞ்சலி செலுத்தினர்.

நேற்று (9.11.2025) மாலை 3.00 மணி அளவில் அன்னாரின் இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அருகில் உள்ள இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



புதூர் ஊராட்சி ஒன்றியம், கே.துரைச்சாமிபுரம் கிராமத்தில் மகாத்மா காந்தி ஊரக தேசிய வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.43.68 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர், ஜீ.வி. மார்கண்டேயன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். நிகழ்வில் புதூர் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், மும்மூர்த்தி, ஒன்றிய பொறியாளர்கள் ரவிச்சந்திரன், தமிழ்ச்செல்வன், ஒன்றிய துணைச் செயலாளர் தங்கராஜ், கிளைச் செயலாளர் செல்வகுமார், உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.